**07-06-2019**

**Press Release**

**Sub: CMRL Bio STP - waste water recycling plant (without electricity) completes one year successfully**

Chennai Metro Rail, an integral part of Chennaities life over two years, has contributed in easing transportation in the ever-growing city's travel chaos. And adding another feather to its cap, CMRL had launched another green initiative "Bio-sewage treatment plant" **without electricity** at CMBT Metro station with the anaerobic sewage treatment plant for 10 KLD capacity on June 05, 2018 – the "World Environment Day"

This Green initiative too has been a trend-setter! Having convinced of its utility, CMRL considers this as an ideal solution to city's mushrooming multi-level residential complexes as an affordable, economical, nonrecurring maintenance and not the least, saving on electricity and water! It's a boon to sanitation!

Chennai Metro Rail had executed a Pilot project of Bio Sewage treatment plant, which does not require electricity to run the plant since last year June 5th, 2018 on World Environment Day and now the plant has thus been successfully running for past one year and saved huge water.

It is big boon for the builders & Residential apartments where the residents suffer due to lack of knowledge of STP operation and huge wear and tear cost on machineries.



Last year Inauguration image – 5/6/2018




CMRL Housekeeping using treated water to garden –

In addition to this, CMRL had launched another anaerobic sewage treatment plant installation at Guindy Metro Station with a total capacity of 10 KLD which is in progress.

An existing 75 KLD capacity plant at CMRL Depot is being enhanced to 150 KLD for the benefit of its staff quarters at the Depot premises and installation is in progress.

07-06-2019

# செய்தி வெளியிடு

## ஓராண்டை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் இயற்கை முறை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்

சென்னை மக்களின் போக்குவரத்திற்கு நாடித்துடிப்பாக இருக்கும் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் சுற்றுச் சூழலை பாதுகாப்பதிலும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. சூரிய ஒளி மூலம் மின்சாரம், பசுமைக் காடுகள் வரிசையில் இன்னொரு மைல்கல்லாக மின்சாரம் இல்லாமல் இயற்கை வழியில் இயங்கும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை அமைத்துள்ளது . கடந்த ஆண்டு ஜூன் 5 ஆம் தேதி உலக சுற்றுச்சூழல் தினத்தை யொட்டி சென்னை புறநகர் பேருந்து நிலையத்தில் உள்ள சென்னை மெட்ரோ இரயில் நிலையத்தில் அமைக்கப்பட்ட இந்நிலையம் வெற்றிகரமாக ஓராண்டை நிறைவு செய்துள்ளது. தினசரி 10 கிலோ லிட்டர் கழிவுநீரை சுத்திகரிக்கும் திறன் வாய்ந்தது இந்த சுத்திகரிப்பு நிலையம். இதன் மூலம் சிறிய அளவிலான தோட்டம் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

இந்த வெற்றியை தொடர்ந்து பசுமை பாதுகாப்பின் அங்கமாக கிண்டி மெட்ரோ இரயில் நிலையத்தில் 10 கிலோ லிட்டர் திறன்வாய்ந்த மற்றொரு சுத்திகரிப்பு நிலையத்தை தற்போது அமைத்துள்ளது. மேலும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமையக வளாகத்தில் அமைந்துள்ள பணியாளர் குடியிருப்பில் அமைக்கப்பட்டுள்ள தினசரி 75 கிலோ லிட்டர் திறன் வாய்ந்த கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை தினசரி 150 கிலோ லிட்டர் திறனுக்கு தரம் உயர்த்தப்பட்டு வருகிறது.

இன்று சென்னையில் பெருகிவரும் மக்கள் தொகை மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு இந்த முன்மாதிரி திட்டங்கள் ஒரு வழிகாட்டியாக அமையும் என்பதில் ஐயமில்லை. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் செயல்படுத்தியுள்ள இந்த திட்டம் மிகக் குறைந்த செலவில், நிறைந்த பலனளிக்கும் திட்டமாகும்.இந்த வெற்றிகரமான முயற்சியின் மூலம் இயற்கை

வழி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் ஒரு முன்னோடியாக தடம் பதித்துள்ளது.